(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.1/2015 |
| Deposition Of Witness for | : | PW5 |
| Name | : | **Tr.Asokan** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **28th March 2025.**

(எதிரிகள் ஆஜர் இல்லை, அவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலையாவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை** :

நான் சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், கூத்தலூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து கடந்த 2013-ம் வருடம் பணிஓய்வு பெற்றேன். நான் 12.01.2013 முதல் செங்காத்தங்குடி

கிராமத்திற்கு கூடுதல் பொறுப்பாக பணிபுரிந்து வந்தேன். எங்களுடைய வட்டாட்சியர் திரு.செல்வராஜ் அவர்களுக்கு சிவகங்கை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவிலிருந்து 2012–ம் வருடம் தோட்டக்லைத்துறை முன்னாள் இயக்குநர் திரு.K.சண்முகசுந்தரம் அவரது மனைவி திருமதி. பாக்கியலட்சுமி அவரது மகன்கள் திரு.பார்த்திபன், திரு.பகீரதன் மற்றும் மகளான திருமதி.அகிலாண்டேஸ்வரி ஆகியோரது பெயரில் காரைக்குடி தாலுகா, செங்காத்தங்குடி குரூப் கிராமத்தில் நஞ்சை மற்றும் புஞ்சை நிலங்கள் உள்ளது குறித்து அறிக்கை அனுப்புமாறு வட்டாட்சியரிடம் கோரி உள்ளனர். அதன்பேரில் வட்டாட்சியர் திரு.செல்வராஜ் அவர்களின் வாய்மொழி உத்தரவின் பேரில் கிராம நிர்வாக அலுவலகத்தில் உள்ள கிராம கணக்குகளை பரிசீலனை செய்து நான் ஒரு அறிக்கையை வருவாய் ஆய்வாளர் திரு.மாதவன் அவர்கள் மூலமாக வட்டாட்சியருக்கு அனுப்பி வைத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் அ.த.சா.ஆ.10, 11 மற்றும் 12–ல் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். இவ்வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. நான் மேற்படி நிலங்கள் தொடர்பாக வட்டாட்சியருக்கு அறிக்கை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். கிராம கணக்குகளை மட்டும் வருவாய் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் கொடுத்தேனே தவிர அறிக்கை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கொடுத்ததாக சொல்லும் அ.த.சா.ஆ.10,11 மற்றும் 12–ல் அடங்கல் கணக்குகள் மட்டுமே உள்ளது என்றும் அறிக்கை எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான்.

2. செங்காத்தங்குடி குரூப்பில் எத்தனை ஆண்டுகள் பணிபுரிந்தேன் என்றால் கடந்த 2003–ம் ஆண்டிலிருந்து 2009–ம் ஆண்டு வரை பணிபுரிந்தேன். அ.த.சா.ஆ.12–ல் நான் 2013–ம் ஆண்டு கையொப்பம் செய்துள்ளேன் என்றால் அந்த சமயத்தில் நான் கூடுதல் பொறுப்பாக செங்காத்தங்குடி குரூப் பார்த்து வந்ததால் 2013–ம் ஆண்டு கையொப்பம் செய்துள்ளேன். 2003–ம் ஆண்டு முதல் 2009–வரை செங்காத்தங்குடி குரூப்பில் பணிபுரிந்தேன் என்ற விபரத்தை ஆய்வாளர் என்னை விசாரித்தபோது நான் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

3. செங்காத்தங்குடி குரூப் கிராமத்தில் எதிரிகள் மற்றும்

அவரது பிள்ளைகளுக்கு சொந்தமான நிலங்கள் உள்ள பகுதி வளமான செம்மண் பூமி என்றால் ஆமாம். எதிரிகள் மற்றும் அவரது பிள்ளைகளுக்கு சொந்தமான நிலங்கள் உள்ள பகுதியில் எதிரிகள் மற்றும் அவரது பிள்ளைகளால் போடப்பட்ட கிணறுகளும் மற்றும் ஆழ்துளை கிணறுகளும் உள்ளது என்றால் எல்லா இடங்களிலும் இல்லை, ஒரு குறிப்பிட்ட பகுதியில் இருக்கிறது. மேற்படி கிணறுகளும், ஆழ்துளை கிணறுகளும் 24 மணிநேரமும் நீர் ஊற்றுடைய மற்றும் தண்ணீர் இறைக்கக்கூடிய வசதி உள்ளது என்றால் சரிதான்.

4. எதிரிகள் மற்றும் அவரது பிள்ளைகளுக்கு சொந்தமான நிலங்களில் எத்தனை கிணறுகள் மற்றும் எத்தனை ஆழ்துளை கிணறுகள் உள்ளது என்றால் சரியாக சொல்ல முடியாது. மேற்படி புஞ்சை நிலங்களில் சில இடங்களில் பலன் தந்துகொண்டிருந்த முந்திரி சாகுபடி நடந்து வந்தது என்றால் ஆமாம். பொதுவாக முந்திரி சாகுபடி செய்யப்பட்ட 3 ஆண்டுகளில் அந்த முந்திரி பலன் கொடுக்க ஆரம்பித்து சுமார் 50 ஆண்டுகாலம் பலன் கொடுக்கக்கூடியது என்றால் ஆமாம். மேற்படி புஞ்சை நிலங்களில் எத்தனை ஏக்கரில் நான் பணிபுரிந்த காலத்தில் முந்திரி சாகுபடி செய்யப்பட்டிருந்தது என்றால் சரியாக கூற இயலாது.

5. ஒவ்வொரு ஆண்டும் முந்திரி சாகுபடியில் எவ்வளவு வருமானம் கிடைக்கப்பெற்றது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பொதுவாக முந்திரி சாகுபடி செய்யும் நிலங்களில் கன்று ஊன்றிய செலவு தவிர 3 அல்லது 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை கன்றுகளுக்கு ஊடாக உழுவதைத்தவிர வேறு பராமரிப்பு செலவுகள் கிடையாது என்றால் சரிதான். எதிரிகள் மற்றும் அவரது பிள்ளைகளுக்கு சொந்தமான நிலங்களில் சாகுபடி செய்யப்பட்டிருந்த முந்திரி பயிர்களும் அவ்வாறுதான் பராமரிக்கப்பட்டு வந்தது என்றால் சரிதான். அந்த முந்திரிக்கு ஊடே ஊடு பயிராக தட்டைப்பயறு, பாசிப்பயறு, மொச்சை, மரவள்ளிக்கிழங்கு, சர்க்கரைவள்ளிக்கிழங்கு பயிர் செய்யப்பட்டிருந்தது என்றால் இல்லை. மேற்படி நிலங்களில் வரப்புகளில் பலன் தரக்கூடிய தென்னை மரங்கள் இருந்தது என்றால் ஒரு குறிப்பிட்ட பகுதியில்தான் இருந்தது. அவ்வாறு ஒரு குறிப்பிட்ட பகுதியில் எத்தனை மரங்கள் இருந்தது என்றால் தெரியாது.

6. அந்த தென்னை மரங்களில் 45 நாட்களுக்கு ஒரு முறை தேங்காய் வெட்டப்படும் என்றால் சரிதான், அங்கு இளங்கன்றுகளும் நிறைய இருந்தன. நான் செங்காத்தங்குடி குரூப்பில் பணியாற்றிய

காலத்தில் எதிரிகள் மற்றும் அவரது பிள்ளைகளுக்கு சொந்தமான நிலங்களில் இருந்த தென்னை மரங்களிலிருந்து ஒவ்வொரு வெட்டுக்கும் எத்தனை தேங்காய்கள் வெட்டினார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் பணியாற்றிய காலத்தில் ஒரு தேங்காயின் விலை சந்தையில் என்ன விலை என்றால் தெரியாது. தோராயமாக ஒரு தேங்காயின் விலை ரூ.20/– முதல் ரூ.25/– வரை இருக்குமா என்றால் தவறு, ஒரு தேங்காயின் விலை ரூ.3/– இருந்தது.

7. நஞ்சை நிலங்களில் இருபோக சாகுபடி இருந்தது என்றால் இல்லை, ஒருபோக சாகுபடிதான் நடந்தது. அந்த ஒருபோக சாகுபடியில் ஒரு ஏக்கருக்கு எத்தனை மூட்டைகள் நெல் கிடைத்தது என்றால் எனக்கு தெரியாது. 2003 முதல் 2009–ம் ஆண்டுவரை ஒரு மூட்டை நெல் எவ்வளவு விலை இருந்தது என்றால் தெரியாது. நஞ்சை நிலங்களில் நெல்விவசாயத்திற்கு பிறகு பாசிப்பயறு மற்றும் மற்ற குறு தானியங்கள் சாகுபடி செய்யப்பட்டது என்றால் இல்லை.

8. நெல் விவசாயம் முடிந்த பிறகு ஒவ்வொரு ஆண்டும் எதிரிகள் மற்றும் அவரது பிள்ளைகளுக்கு சொந்தமான நிலங்களில் பாசிப்பயறு மற்றும் குறு தானியங்கள் சாகுபடி செய்யப்பட்டு வருமானம்

இருந்தது என்றால் இல்லை. அ.த.சா.ஆ.10, 11 மற்றும் 12–ல் எதிரிகள் மற்றும் அவரது பிள்ளைகள் அல்லாது வேறு நபர்களின் பெயர்களில் உள்ள சொத்துக்களை பொறுத்தும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.த.சா.ஆ.10, 11 மற்றும் 12–ல் 1வது எதிரியின் பெயரில் செங்காத்தங்குடி குரூப்பில் எந்த சொத்தும் கிடையாது என்றால் சரிதான். நான் ஆண்டுக்கு ஒருமுறை ஒவ்வொரு நிலத்திலும் ஒவ்வொரு விவசாயியும் என்ன பயிர்கள் விவசாயம் செய்தார்கள் என்று என்னால் கூற இயலுமா என்றால் கூற இயலாது.

9. சாகுபடி கணக்கு என்பது ஆண்டுக்கு ஒருமுறை கண்மாய் கரையில் நின்று கொண்டு ஜமாபந்திக்காக தோராயமாக எழுதுவதுதான் வழக்கம் என்றால் இல்லை. ஒரு ஆண்டுக்கு எத்தனை முறை விவசாய நிலங்களை நான் பார்வையிட்டேன் என்றால் ஒரு முறை பார்வையிட்டேன். ஒரு நபர் பெயரில் சொத்து மற்றும் பட்டா இருக்கும் ஆனால் அந்த நிலத்தினை வேறு ஒரு நபர் உழுது அனுபவித்து வரும் வழக்கமும் பொதுவாக கிராமங்களில் உள்ளது என்றால் சரிதான். அப்படி உண்மையாக அந்த நிலத்தினை உழுவடை அல்லது அனுபவம் செய்பவர்

பெயரை சாகுபடி கணக்கில் எழுதுவது வழக்கம் இல்லை என்றால் சரிதான்.

10. நான் எதிரிகள் மற்றும் அவரது பிள்ளைகளின் பெயரில் உள்ள எந்த நிலங்களையும் நான் நேரடியாக பார்வையிடாமல் வட்டாட்சியர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நில சம்பந்தப்பட்ட சர்வே எண்களை மட்டும் குறிப்பிட்டு ஆவணங்களை கொடுத்துள்ளேன் என்றும் அந்த ஆவணங்கள் உண்மையான சாகுபடி விபரங்களை தெரிவிக்கக்கூடிய ஆவணங்கள் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. எந்த கிராம நிர்வாக அலுவலரும் அவரது குரூப்பில் உள்ள நிலங்களை நேரடியாக பார்வையிடாமல் அலுவலகத்தில் வைத்தே தோராயமாக கணக்குளை எழுதுவது வழக்கம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2025.03.28 17:15:44 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.